# மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் தொடர்பான தேசிய மத்திய நிலையம் (NCAS)

## பத்தொன்பதாவது ஆண்டறிக்கை

## 2023

## தொலைநோக்கு

"மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்துறையில் அறிவு, மூலவளங்கள், ஆய்வு, கல்வி மற்றும் சமூக நடவடிக்கைகளில் பரஸ்பர ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதில் திறன் வாய்ந்த தேசிய மற்றும் சர்வதேச புகழ் மிக்க நிலையமாக விளங்குதல்."

## செயற்பணி

"இலங்கையின் சகல பல்கலைக்கழங்களிலும் கற்பித்தல் மற்றும் ஆய்வினை பலப்படுத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான தேவையை இனங்காணுதல், ஆராய்ச்சி மற்றும்

கொள்கை உள்ளீடுகளினூடாக சமூக மற்றும் நாட்டின் அபிவிருத்திற்கு பல்கலைக்கழங்களின் பங்களிப்பை உணர்ந்தும், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்களில் உயர் கல்விக்கான தேசிய நிலையமானது கோட்பாட்டு ரீதியாகவும் பிரயோக ரீதியாகவும் பட்டப் பின்படிப்பு, கலாநிதி மற்றும் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்களின் ஏனைய ஆய்வுகளுக்கு துணைபுரிவதுடன் அப் போக்கில் உயர் சிந்தனையையும் ஆக்கபூர்வமான உருவாக்கத்தையும் மேம்படுத்தி கல்விமான்களை ஊக்குவித்தல் மற்றும் வெகுமதியளித்தல் ஊடாக மேம்படுத்துதல். மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்களில் உயர் கல்விக்கான தேசிய நிலையமானது அதன் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கிடையிலான இலங்கைப் பல்கலைக்கழக முறைமை வலையமைப்பின் உயர் நிறுவனமாகும்."

## முன்னுரை



மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் தொடர்பான தேசிய மத்திய நிலையம் (NCAS) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 24 அ பிரிவு (1) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, 2005 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலம் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அறிவுசார் ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், 2005 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இந்ந நிலையத்தின் செயற்பணியானது இந்தத் துறையிலுள்ள அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், வல்லுநர்கள் மற்றும் மாணவர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டினை வழங்குவற்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்குவதேயாகும்.

பல்வேறு காரணங்களினால் 2023 ஆம் ஆண்டு முக்கியமான மைல்கல்லாக அடையாளப்படுத்தப்படுகின்றது. கொவிட் - 19 தொற்றுநோய்க்குப் பின்னர் சேவைகள், கடமைகள் மற்றும் செயல்திறனை முழுநேர அடிப்படையில் வழங்க முடிந்ததுடன் சுமார் 5 ஆண்டுகளாக பதில் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் இயங்கிய இந்த நிறுவனத்திற்கு முழுநேர அடிப்படையில் பணிப்பாளர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடிந்தமையும் இவற்றுள் அடங்கும்.

2021-2022 ஆம் ஆண்டுகளில் பல்வேறு செயற்பாடுகள் பின்னடைவைச் சந்தித்த சூழலில், முழுமையாக மீளாய்வு செயற்பாடுகளின் ஊடாக மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத் துறையில் தேவைப்படும் அறிஞர்களுக்கு பகுதியளவில் நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுத்ததன் மூலம் செயற்திறனை இயல்பு நிலைக்கு மீட்டெடுக்க நாம் நடவடிக்கை எடுத்தோம். அதன்படி, 2023 ஆம் ஆண்டு சனவரி மற்றும் யூலை மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு சுற்று தேர்வுகளின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் 19 மானியங்களை வழங்க முடிந்தது. இதற்கு மேலதிகமாக, NCAS இனால் இலங்கையில் பல்கலைக்கழகங்களில் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் மற்றும் அதனோடு தொடர்புடைய ஆய்வு முறைமைகள், புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு மற்றும் தொடர்புடைய வேறு துறைகளில் (SPSS, AMOS, NVIVO) தமது பட்டப்பின் பட்டக் கற்கையினை மேற்கொள்வதற்கு தொடர்ச்சியான பயிற்சியினை கல்வியியலாளர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கல்வியலாளர்களுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படும் சுட்டெண்ணிடப்பட்ட இதழ்கள் மற்றும் உயர் தரத்திலான வெளியீடுகளில் பதிப்பிப்பதற்கான (international renowned Indexed journals and high standards publications) பயிற்சியினை வழங்கும் பிரதான நோக்கத்துடன் 2023 ஆம் ஆண்டிலேயே, NCAS கல்வியியலாளர்களுக்கு "நூலியல் பகுப்பாய்வுடன் முறைசார் இலக்கிய மீளாய்வில் நிபுணத்துவம் பெறல் (Mastering Systematic Literature Review with Bibliometric Analysis)" பாட நெறிகளை அறிமுகப்படுத்தியது. பங்கேற்பாளர்களின் கோட்பாட்டு மற்றும் அனுபவ ரீதியிலான ஆய்வுத் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் இவ்விரிவான பாடநெறிகளை நிபுணத்துவக் குழுவானது நடாத்தி

வருகிறது. விரிவுரைகளானவை இலத்திரனியல் கற்றல் வளங்கள் மற்றும் மென்பொருள் செயலிகள் வாயிலாக இடம் பெற்று வருகின்றன. மேலும் NCAS இல் தாபிக்கப்பட்ட கணிணி ஆய்வகமானது பட்டப்பின் பட்டதாரிகளுக்கு புள்ளிவிபரவியல் பயிற்சியினை வழங்கி வருகிறது. NCAS அதன் இணையதளத்தின் ஊடாக நூலகப் (e-library) பயன்பாட்டு வசதியினையும் ஆய்வாளர்களுக்கு வழங்கி வருகிறது.

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் தொடர்பான தேசிய மத்திய நிலையம் (NCAS) கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களை அடைவதில் 2023 ஆம் ஆண்டில் இடம்பெற்ற புதிய முன்னேற்றங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் தொடர்பான தேசிய மத்திய நிலைய கட்டளைச் சட்டத்தின் 5(II) ஆம் பிரிவிற்கமைய, NCAS இனால் வழங்கப்படும் கல்வி மற்றும் தொழில்சார் திட்டங்களின் தரத்தை அடைவதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் சிரேட்ட கல்வியலாளர்கள் கல்லூரியை (College of Senior Fellows) நிறுவ எம்மால் முடிந்தது. அவை நிர்வாக குழு மற்றும் முகாமைத்துவ சபையின் (Council of Management and Council of Regent) அங்கீகாரத்தோடு இயற்றப்பட வேண்டிய ஒரு சில தகவுத் திறன்களை பரிந்துரைக்கும் NCAS இன் தர உத்தரவாதத்தை உறுதிப்படுத்தும் அமைப்பாகவும் அவர்கள் செயல்படுகின்றனர். சிரேஷ்ட கல்வியலாளர்கள் கல்லூரியின் நோக்குடன் இணைவதாக NCAS கட்டளைச் சட்டத்தின் 5(4) மற்றும் (6) ஆம் பிரிவுகளின் பிரகாரம் சிரேஷ்ட கல்வியலாளர்கள் கல்லூரியின் விடயப்பரப்பிற்கும் பிராந்திய சமூகத்தினது கேள்வியை நிவர்த்திக்கும் மிக முக்கியமான தேவையை கருத்தில் கொண்டு முகாமைத்துவ சபைக்கு பரிந்துரைக்கப்படும் NCAS இனால் வழங்குவதற்கு உத்தேசிக்கப்படும் முதுமாணிப் பட்டம் [SLQF மட்டம்10], முதுதத்துவமாணிப் பட்டம் MPhil Degree [SLQF Level 11] மற்றும் PhD Degree [SLQF Level 12] ஆகியவற்றிற்கான துணை விதிகளைத் தயாரித்தமையானது குறிப்பிடத்தக்க மைல் கற்களில் ஒன்றாகும். மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் என்ற பரந்த பிரிவில் பல்துறை மற்றும் இணைப்பாட ஆய்வுக்கான பிரதான மையமாக விளங்கும் NCAS இத்தகைய கற்கைகளை வளப்படுத்துவதற்கான இயலுமையைக் கொண்டுள்ளதுடன், NCAS ஆனது அனைத்து அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அதிகாரம்பெற்ற அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் அதன் முதல் முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டபடிப்புக்களை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறது.

இரண்டு வருடங்களுக்கு பிறகு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் (IRSSSH) 2023 ஆம் ஆண்டு 5 வது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டை நேரடி பங்கேற்புடன் நடாத்த முடிந்ததையிட்டு NCAS பெருமிதம் கொள்கின்றது. கிடைக்கப் பெற்ற 132 ஆய்வுச்சுருக்கங்களில் 52 ஆய்வு சுருக்கங்கள் முழுமையான பகுப்பாய்வின் பின்னர் தெரிவு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதோடு அவை மாநாட்டு கருத்தரங்கில் வெளியிடப்பட்டன. கலாநிதி. Lodewijk J.Wagenar பிரதம பேச்சளாராக பங்கேற்றதோடு பேராசிரியர் Macieji Kowaleswski (போலந்து), பேராசிரியர் Ankuran Dutta (இந்தியா), பேராசிரியர் Sandagomi Coperahewa (இலங்கை), Md.Reyad Hussain (பங்களாதேஷ்), பேராசிரியர் Mir.Abdul Sofique (இந்தியா) மற்றும் Ms.Himalee Kularathne (இலங்கை) ஆகியோர் வளவாளர் குழாமாக

பங்கேற்று துறை குறித்து தங்களது அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டனர் என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

NCAS இன் கூட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் தொடர்பான தேசிய மத்திய நிலையமாக NCAS இன் தரத்தை உயர்த்துவதும் அதன் சேவைகளை பராம்பரிய கற்றல் - கற்பித்தல் முறைமைக்கு அப்பால் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதும் மற்றும் சிறந்த ஆய்வு மற்றும் பயன்பாட்டிற்கான திடமான அணுகுமுறைகளைக் கொண்டிருப்பதே பிரதான நோக்கமாகும்.

பேராசிரியர் (திருமதி) பிரஷாந்தி நாரன்கொட
**பணிப்பாளர்**

**NCAS இன் கூட்டுத்திட்ட இலக்குகள், நோக்கங்கள் மற்றும் மூலோபாயங்கள்**

| |
|---|
| இலக்கு 1: கலாநிதிப் பட்டம் வரை பட்டப்பின் கற்கைகளுக்கு வசதியளித்தல் |
| **நோக்கம்:1. அரச பல்கலைக்கழகங்களில் தகைமைபெற்ற பட்டப்பின் கற்கை கல்வியலாளர்களது எண்ணிக்கையை அதிகரித்தல்** |
| மூலோபாயம் 1.1.1: புகழ் பெற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டங்களைத் தொடர கல்வியலாளர்களுக்கு நிதி உதவிகளை வழங்குதல் |
| மூலோபாயம்; 1.1.2: QUT உடனான புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் கலாநிதிப் பட்ட தேர்வாளர்களுக்கு நிதி உதவிகளை வழங்குதல் (நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| மூலோபாயம் 1.1.3: ஆய்வு பயிற்சி தொடர்பில் பல்கலைக்கழக ஆசிரியர்களை ஊக்குவித்தல் |
| இலக்கு 2: பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மனித வள உருவாக்கத்திற்குப் பங்களித்தல் |
| **நோக்கம் : 2. 1 பட்டப்பின்படிப்பு கற்கைகளை மேம்படுத்துவதற்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் / பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தல்** |
| **இலக்கு 3: தேசிய மட்டத்தில் ஆய்வு தகவுகளை மேம்படுத்தல்** |
| **நோக்கம் : 3.1 ஆய்வு ஈடுபாட்டுடனான கண்டுபிடிப்புக்கள் மற்றும் புலமைத்துவ பணிகளை பரப்புதல்** |
| மூலோபாயம் 3.1.1: புதிய ஆய்வு கண்டுபிடிப்புக்களைப் பகிர்வதற்கும்/ பகிர்ந்து கொள்வதற்கான ஆய்வு கலாச்சாரத்தை மாநாடுகள் மூலம் மேம்படுத்தல் |
| மூலோபாயம் 3.1.2: குறுகிய கால ஆய்வு நடவடிக்கைகளுக்கு கல்வியியலாளர்களை ஊக்குவித்தல் |
| **நோக்கம் : 3.2 ஆய்வு ஈடுபாட்டு கண்டுபிடிப்புக்கள் மற்றும் கல்வியியலாளர் பணிகளை வெளியீடுகள் வாயிலாக பரப்புதல்** |
| மூலோபாயம் 3.2.1: புதிய ஆய்வு கண்டுபிடிப்புக்களைப் பகிர்வதற்கும் / பகிர்ந்துக் கொள்வதற்காக ஆய்வு கலாச்சாரத்தை மாநாடுகள் மூலம் மேம்படுத்தல் |
| மூலோபாயம் 3.2.2: குறுகிய கால ஆய்வுகளுக்காக கல்வியியலாளர்களை ஊக்குவித்தல் |
| **இலக்கு 4: வளர்ந்து வரும் கல்வி மற்றும் தொழில்முறை சமூகங்களின் ஆர்வம் மற்றும் திறன் சார்பில் வழிசமைத்தல்** |
| **நோக்கம் : 4.1தொழில்சார்/தொழில் திறன்களை விருத்தி செய்வதற்காக பல்கலைக்கழக கட்டமைப்பின் உள்ளேயும் வெளியேயும் கல்விசார் சமூகத்துக்கு வழிசமைத்தல்** |
| மூலோபாயம் 4.1.1: ஆய்வு, கல்விசார் சமூக முறைகள் மற்றும் தரவு பகுப்பாய்வு மற்றும் |

| |
|---|
| ஆய்வு பயிற்சி தொடர்பாக பல்கலைக்கழக ஆசிரியர்களை ஊக்கப்படுத்தல் |
| **இலக்கு 05: ஆய்வு கலாச்சாரத்தை நோக்கிய புதிய பங்களிப்புகளை பிரதிபலித்தலை வளர்த்தலும் ஊக்குவித்தலும்** |
| **நோக்கம் 5.1: நடைமுறை சமூக பொருளாதார ஆய்வு பிரச்சினைகள் தொடர்பாக பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் மற்றும் ஆர்வமுள்ள புலமையாளர்களை ஈடுபடச் செய்தலும் விழிப்பூட்டலும் ஆய்வு கண்டுபிடிப்புக்களைப் பரப்புதலும்** |
| மூலோபாயம் 5.1.1: தனிப்பட்டமற்றும் கூட்டு செயற்றிட்டங்களை ஒழுங்கமைத்தல் |
| மூலோபாயம் 5.1.2: இத்துறைசார் தகைசால் அறிஞர்கள் மற்றும் பாரம்பரிய அறிவு மையங்களுடனான புலமைசார் கலந்துரையாடல்கள் |
| **நோக்கம் 5.2: இயற்பியல் வரலாறு மற்றும் சமூக கலாச்சார தொடர்பாடல்கள் மூலம் அனுபவ ரீதியிலான ஆதாரங்களுக்கான தேடலை ஊக்குவித்தல்** |
| மூலோபாயம் 5.2.1. “மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம்” தொடர்பான உண்மையான /பாரம்பரிய அறிவைப் பாதுகாத்தல் |
| **இலக்கு 06: பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் ஊமியர்கள் மற்றும் தொழில்சார் தொகுதிகளின் இயல்ககைகைகளை மேம்படுத்தல்** |
| **நோக்கம் 6.1: பல்கலைக்கழக முறைமையில் நிருவாக மற்றும் கல்விசாரா ஊமியர்களை வலுவூட்டல்** |
| மூலோபாயம் 6.1.1: பயிற்சிகளை வழங்குதல் / தொழில்சார் மற்றும் நிருவாகத் திறன் தொர்பான அறிவை மேம்படுத்தல் |
| **இலக்கு 07: கல்விசார்/ கல்விசாரா ஊழியர்களுக்காக பயிற்சி/ வாண்மை / வினைத்திறன் நிகழ்ச்சித்திட்டங்களை கட்டடைத்தல்** |
| **நோக்கம் 7.1: பல்கலைக்கழக முறைமையின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊமியர்களை வலுவூட்டல்** |
| மூலோபாயம் 7.1.1: பயிற்சிகளை வழங்குதல் |
| **இலக்கு 08- NCAS கட்டிட வளாகத்தின் உட்கட்டமைப்புக்களை விருத்தி செய்தல்** |
| **நோக்கம் 8.1: ஆய்வு நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற ஆய்வு, நிர்வாக மற்றும் கற்றல் செயற்பாடுகளுக்கு வசதியளித்தலும் அவற்றுக்குச் சாத்தியமான சூழலை வழங்குதலும்** |
| மூலோபாயம் 8.1.1: NCAS இன் தற்போதுள்ள கட்டிட வளாகத்தின் தரத்தை மேம்படுத்தல் |
| மூலோபாயம் 8.1.2: சிறந்த கற்றல் - கற்பித்தல் சூழலை வழங்குதல் |

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நிறுவனத் தகவல்கள் | x |
| அறிமுகம் | 1-3 |
| NCAS இன் முகாமைத்துவம் | 3-8 |
| NCAS இன் சிறந்த நிர்வாகம் | 8-12 |
| NCAS இன் பணியாட் குழாம் | 12-13 |
| பயிற்சிப்பட்டறைகள் / பாடநெறிகள் / சமர்ப்பிப்புகள் | 13-16 |
| NCAS இன் தகவல் தொழிநுட்ப வளங்கள் | 16-17 |
| புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள் | 18-30 |
| நூலகம் / இலத்திரனியல் வளங்கள் | 31-32 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை - 2023 | 33-34 |
| நிதிக் கூற்றுக்கள் 2023 | 35-58 |

## அட்டவணை மற்றும் வரைபடங்கள்

## அட்டவணைகள்

அட்டவணை 01 : நிர்வாக சபையின் உறுப்பினர் உள்ளடக்கம் 5-6

அட்டவணை 02: முகாமைத்துவச் சபையின் உறுப்பினர் உள்ளடக்கம் 6-7

அட்டவணை 03: திருத்தப்பட்ட வாழ்க்கைச் செலவு 11

அட்டவணை 04: NCAS இன் பணியாட்குழாம் நிலை 13

அட்டவணை 05: 2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சமர்ப்பிப்புக்கள்/ குறுகிய கற்கைநெறிகள்/ செயலமர்வுகள் 13-14

அட்டவணை 06:NCAS மானிய செலவீனங்கள் 19

அட்டவணை 07: துறைசார் அடிப்படையில் மானியம் பெறுபவர்களின் ஒதுக்கீடு 2005/2023 20

அட்டவணை 08: கலாநிதிப் புலமைப்பரிசில் தொடர்பான திறைசேறி நிதிப் பயன்பாடு 22

அட்டவணை 09: இலங்கைப் பல்கலைக்கழகங்களில் சேவையாற்றுகின்ற கலாநிதிக் கல்வியியலாளர்களின் பரம்பல் 23

அட்டவணை 10: பூர்த்தி செய்யப்பட்ட மானியங்கள் 25-26

அட்டவணை 11: 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட புதிய மானியங்கள் 26-29

அட்டவணை 12: QUT (அவுஸ்திரேலியா) - NCAS கலாநிதி புலமைப்பரிசில் உதவித் தொகை - 2023 30

## வரைபடங்கள்

படம் 01: NCAS இன் நிறுவனக் கட்டமைப்பு 14

படம் 02: துறைசார் அடிப்படையில் மானியம் பெறுபவர்களின் ஒதுக்கீடு 2005 - 2023 21

படம் 03: வழங்கப்பட்ட மானியங்கள் (2005 - 2023) 22

படம் 04: இலங்கைப் பல்கலைக்கழகங்களில் சேவையாற்றுகின்ற கலாநிதிக் கல்வியியலாளர்களின் பரம்பல் (NCAS இனால் வழங்கப்பட்ட மானியங்கள் 2005-2023) 24

## நிறுவனத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : | மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் தொடர்பான தேசிய மத்திய நிலையம் (NCAS) |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | : | இல.6A, சுகஸ்தான் கார்ட்ன்ஸ்,<br>வோர்ட் பிளேஸ், கொழும்பு 07 |
| நிலைப்பாடு மற்றும் சட்டப்படிவம் | : | 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் ஓராம் உபபிரிவின்கீழ் 2005 ஒக்டோபர் மாதக் கட்டளைச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட அரச நியதிச் சட்ட சபையாகும் |
| நிதிகளின் ஆதாரம் | : | திரைச்சேறி நிதி |
| நிதிக் காலம் | : | 2023 ஜனவரி 01 முதல் 2023 திசெம்பர் 31வரை |
| பணிப்பாளர் | : | சிரேஸ்ட பேராசிரியர்.பிரேமகுமார டி சில்வா (2023 சனவரி 31 வரை)<br>பேராசிரியர் (திருமதி) பிரஷாந்தி நாரன்கொட (2023 பெப்ரவரி 01 முதல்) |
| கணக்காய்வாளர் | : | இலங்கை கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளகக் கணக்காய்வாளர்கள். |
| வங்கியாளர்கள் | : | இலங்கை வங்கி, டொறிங்டன் கிளை |
| தொடர்பு விபரங்கள் | : | தொலைபேசி : 011-2685850,0112693974<br>தொலைநகல் : 0112693975<br>மின்னஞ்சல் : info@ncas.ac.lk<br>இணையதளம் : www.ncas.ac.lk |

## அறிமுகம்

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் தொடர்பான தேசிய மத்திய நிலையம் (NCAS) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 24 அ பிரிவு (1) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி , 2005 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டதுடன் 2005 ஒக்டோபர் 19 ஆம் திகதியையுடையதும் 1415/17 ஆம் இலக்கத்தையுடையதுமான அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்டு, 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1567 ஆம் இலக்கத்தையுடைய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் ஊடாக 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க NCAS (திருத்தம்) கட்டளைச்சட்டத்தினால் திருத்தச் செய்யப்பட்டது.

NCAS என்பது அடிப்படையில் அரச பல்கலைக்கழக முறைமையில் சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் ஆகிய துறைகளில் சேவையாற்றுகின்ற கல்விசார் சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் முகமாக தாபிக்கப்பட்டது. இது துரிதமாக விரிவடைந்து வருகின்ற தேசிய பல்கலைக்கழக கட்டமைப்பில் கல்விசார் தேவைகளுக்கு உதவுவதற்கு சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் துறைகளின் தேவைகளை நிறைவு செய்யதற்காக குறிப்பாக தற்போது காணப்படும் பல்கலைக்கழக முறைமைக்கு அப்பாற்பட்ட சுயாதீன நிறுவனம் ஒன்றை தாபிப்பதற்காக பேராசிரியர் சேனக பண்டாரநாயக்க மற்றும் இத்துறையின் பல்வேறு சிரேட்ட பேராசியர்களினால் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அதேசமயம் ஏனைய பிரதான கல்விசார் துறைகள், அதாவது விஞ்ஞானம், பொறியியல், மருத்துவக் கல்வி முதலியன அரச/ சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஆய்வு வாய்ப்புக்கள் மற்றும் பட்டப்பின் கற்றைகளை ஊக்குவிக்கும் பின்னனியல் சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் துறைகயின் தேவைகளை நிறைவு செய்யும் ஒரேயொரு அரசாங்க நிறுவனமாக NCAS மாத்திரமே விளங்குகின்றது. 1970 களின் பிற்பகுதியில் தகைமைப்பெற்று பல்கலைக்கழக அனுமதிகளை எதிர்பார்க்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக கொள்கை மாற்றமடைந்ததை அடுத்து நாட்டின் பல பாகங்களில் பல பதிய பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டன. இந்தப் புதிய நிறுவனங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான பணியாட்குழாமின் தேவைகள் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிருந்து பூர்த்தி செய்யப்பட்டன. இச் செயற்பாட்டின் விளைவாக கல்விசார் சமூகத்திற்கு பேரழிவு ஏற்பட்டதோடு தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் கூட கற்பித்தல் நடவடிக்கைகளும் பலவீனமடைந்தன.

புதிதாக தாபிாக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஆய்வு மற்றும் உயர் கற்கைச் செயற்பாடுகளினை மேற்கொள்வதற்கு அனுபவமிக்க தகைமை பெற்ற விரிவுரையாளர்களது பற்றாக்குறை நிலவுகின்றமை தொடர்பில் அண்மைய புள்ளிவிபரங்களின்படி காட்டுகின்றன. புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டதால் எழுந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்வு நடவடிக்கையானது புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களுக்கு பட்டப்பின் கற்றைகளை மேற்கொள்வதனை ஊக்குவிப்பதன் ஊடாக மானுடவியல் கற்கை மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. NCAS ஆனது ஆய்வு முறைமைகள், முன்மொழிவுகளை விருத்திசெய்தல், சமூக விஞ்ஞான ஆய்வுக்குத் தேவையான புள்ளிவிபரவியல் முறைமை மற்றும் கற்கைக் கட்டுரைகளுக்குத் தேவையான எழுத்துத் திறன் போன்றவற்றை அறிமுகப்படுத்தி இளம் ஆசிரியர்களை அவர்களின் பட்டப்பின்படிப்பு கற்கை நடவடிக்கைகளுக்கு தயார்ப்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்ற அதே நேரத்தில் அவர்களின் கலாநிதிப் பட்டப்படிப்பிற்கான நிதியுதவியையும் வழங்குகின்றது. 2023 ஆம் ஆண்டு நிறைவுக்குள் கல்வியியலாளர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தங்கள் கற்கையைத் தொடர 471 நிதி மானியங்கள் அரசாங்க நிதியுதவி மூலம் வழங்கப்பட்டதென்பது மிக முக்கியமான பதிவு ஆகும். தற்பொழுது NCAS அரச பல்கலைக்கழக கட்டமைப்பின் மனித

வளங்களின் அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு கோணங்களில் வசதியளிப்பதன் மூலம் பிரதான வளவாளராக உருவெடுத்துள்ளதோடு பிரதான மனித வளங்களின் அபிவிருத்தி தளம் என்ற அந்தஸ்தையும் பெற்றுள்ளது.

NCAS பணிப்பாளராக பேராசிரியர் மேர்வின் லால் தர்மசிறியின் பதவிக்காலத்தின் பின்னர், 2023 ஆண்டு முதல் பணிப்பாளருக்கான பதவியானது வெற்றிடமாக இருந்ததோடு, மேற்படி பதவியானது பதில் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்களின் உப தலைவரால் மேற்கொள்ளப்பட்டது என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 01 ஆம் திகதியிலிருந்து செயல் வலுவுக்கு வரும் வகையில் களனிப் பல்கலைகழகத்தின் பேராசிரியர் (திருமதி) பிரஷாந்தி நாரங்கொட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர், பட்டப்பின் படிப்பிற்கான மானியங்களுக்கான NCAS வழிகாட்டுதல்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததோடு பிரதானமாக மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளில் கல்விசார் ஊழியர்களின் நலனுக்காக, அவர்களின் ஆய்வு திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு பல பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தினார். இப்பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் முக்கிய நோக்கம் Nvivo/AMOS/Eviews போன்ற அதிநவீன மென்பொருட்களைப் பயன்படுத்தி சமூக விஞ்ஞான ஆய்வுகளின் பண்புசார் ஆய்வுக்கான அம்சங்களை விருத்தி செய்வதாகும். சம்பவங்கள் தொடர்பில் தனித்தனியாக பட்டியலிடப்பட்டுள்ளது. உயர் கற்கை பிரிவினுள் ஆய்வு மற்றும் உயர்கல்வியின் மேம்பாடு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் மீளாய்வு வருடத்தில் NCAS இனால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பெறுபேறுகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பிரிவுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படாது தொடர்புடைய வேறு ஏனைய துறைகளிலும் செல்வாக்கு செலுத்தியுள்ளது.

மேலும், முகாமைத்துவ சபைக்கு அறிக்கை அளிக்கும் உள்ளக தர சான்றிதழ் பிரிவானதும் மற்றும் NCAS கட்டளைச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், NCAS இனால் வழங்கப்படுவதற்கு முன்மொழியப்பட்ட முதுமாணிப் பட்டம் (Masters), பட்டப்படிப்பு (Degree) முதுதத்துவமாணிப் பட்டம் (MPhil) மற்றும் கலாநிதிப் பட்டப்படிப்பு (PhD) ஆகியவற்றிற்கான பரீட்சைத் துணைவிதிகளைத் தயாரித்ததுமான, சிரேஸ்ட கல்வியலாளர்களின் கல்லூரியை நிறுவுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை அவர் எடுத்தார். அதிகாரிகளினால் எப்போதும் புறக்கணிக்கப்பட்ட அல்லது கவனிக்கப்படாத சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் துறையில் பொதுவான ஆய்வு கலாச்சாரம், ஆய்வு முறைகள் மற்றும் ஆய்வு முறைமைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஆரம்பித்தற்கு இது NCAS இன் குறிப்பிடத்தக்க மைல் கற்களில் ஒன்றாகும்.

2023 ஆம் ஆண்டானது NCAS இன் பல்வேறு நடவடிக்கைகளுக்காக குறித்தொதுக்கப்பட்டுள்ளது. பிரதான திருப்புமுனையாவது கொவிட் - 19 தொற்றின் மூலம் பின்னடைந்த அதன் முழுநேர பௌதீக செயற்பாடுகளாகும். அத்தோடு NCAS இனால் பல பயிற்சித் திட்டங்கள் நேரடி முறையிலும் சில சந்தர்ப்பங்களில் கலப்பு முறையிலும் நடாத்தியதோடு, தனிமையின் இடைவெளியை நிரப்புவதற்கு அவர்களது அறிவை ஒன்றிணைத்து பகிந்து கொள்ளும் நோக்கத்துடன் அனைத்து ஆய்வாளர்களுக்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் NCAS இனால் சமூக விஞ்ஞான மற்றும மானிடவியல தொடர்பான 5 வது சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கு (IRSSSH) 2023 இனை முழுமையாக நேரடி முறையில் நடாத்துவதற்கு முயற்சி மேற்கொண்டது. இது 2023 நவம்பர் 29 ஆம் திகதி “Heritage and Culture: Re-visiting the late Professor Senake Dias Bandaranayake” என்ற பரந்த கருப்பொருளின் கீழ் 52 தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வாளர்களின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நடைபெற்றது. Amsterdam தொல்பொருட்சாலையின் முன்னாள் பொறுப்பாளரும் இலங்கையில் ஒல்லாந்தர் வரலாற்று ஆய்வாளருமான Dr. Lodewijk J. Wagenaar இனால் பிரதான உரையாற்றப்பட்டதோடு, பேராசிரியர் Maciej Kowalewski (Poland), பேராசிரியர்

Ankuran Dutta (India), பேராசிரியர் SandagomiCoperahewa (Sri Lanka), Md. Reyad Hossain (Bangladesh), பேராசிரியர் Mir Abdul Sofique (India), and Ms. Himalee Kularathne (Sri Lanka) ஆகியோர் குழு உறுப்பினர்களாக பங்கேற்று இத்துறை குறித்த தங்கள் அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டனர்.

**<u>வரைபடம் 01: NCAS நிறுவன கட்டமைப்பு</u>**



## 2. NCAS இன் சிறந்த நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்

2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதியையுடையதும் 1567 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளியிடப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க NCAS (திருத்த) கட்டளைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டு (02) பிரதான அமைப்புக்கள் ஆகும் :-

(அ) நிர்வாக சபை

(ஆ முகாமைத்துவச் சபை

## 2.1 நிர்வாக சபையின் நியதிச்சட்ட கூட்டங்கள்

நிர்வாக சபை NCAS இன் பிரதான கொள்கைகளினை உருவாக்கல் மற்றும் நிர்வாக அதிகாரம் பெற்ற ஒரு அமைப்பாக இருப்பதுடன் ஒரு வருடத்தில் இருமுறை கூடுகின்றது.

**அட்டவணை 01 : நிர்வாக சபையின் உறுப்பினர் உள்ளடக்கம்**

<table>
<tr><th colspan="3">நிர்வாகச் சபையின் உறுப்பினர் உள்ளடக்கம்</th></tr>
<tr><td>மாண்புமிகு கலாநிதி சுசில் பிரேமஜயந்த அவர்கள்</td><td colspan="2">உயர்கல்வி அமைச்சின் அமைச்சர்</td></tr>
<tr><td>சிரேஸ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க<br>B.A. Econ. (Special)(SJP); M.A. Econ. (Colombo); MSc. Econ. of Rural Dev. (Saga, Japan); Ph.D. (Kagoshima, Japan)</td><td colspan="2">பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர்</td></tr>
<tr><td>சிரேஸ்ட பேராசிரியர் பிரேமகுமார த சில்வா (31.01.2023 வரை)<br>BA, MA (Colombo), MSc & PhD (Edinburgh, UK)<br>பேராசிரியர் (திருமதி) பிரஷாந்தி நாரன்கொட (01.02.2023 முதல்)<br>BA(Hons) (Kel.), MSc (PGIAR, Kel.), PhD (California, USA)</td><td colspan="2">NCAS முகாமைத்துவ சபையின் தலைவர்</td></tr>
<tr><td>சிரேஸ்ட பேராசிரியர் எல் மானவடு<br>BA (Colombo), M.Sc (A.I.T, Thailand), Ph.D (Colombo)</td><td>பீடாதிபதி, கலைப் பீடம் கொழும்புப் பல்கலைக்கழகம்</td><td rowspan="3">பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உரிய நிலையியற் குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்ட மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான துறைகளுடன் தொடர்புடைய பீடங்கள் ஆறின் பீடாதிபதிகள்</td></tr>
<tr><td>பேராசிரியர் கே. சுதாகர் (ஜனவரி 2023 வரை)<br>B.A.(Hons) (Jaffna), M.A. (Colombo), PGD.(India), M.Tech. (India), Ph.D (Singapore).<br>பேராசிரியர் எஸ்.ரகுராம் (2023 ஜனவரி முதல்)<br>B.Sc. (University of Madras, India), Master of Journalism and Mass Communication (Madurai Kamaraj University, India), PhD (Gandhigram Rural University, India)</td><td>பீடாதிபதி, கலைப் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்</td></tr>
<tr><td>பேராசிரியர் என்.எஸ். புஞ்சிஹேவா LLB (Colombo), LLM (MIPLC, Germany), PhD (University of Munich, Germany)</td><td>பீடாதிபதி, சட்ட பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| கலாநிதி இ.எம்.பி.சி.எஸ்.ஏக்கநாயக்க<br>*B.A. Hons. (Peradeniya), PGDE (Peradeniya), M.Ed. (Sussex, UK), M.Phil. (Colombo), and Doctor of Education (Leicester, UK).* | பீடாதிபதி, கலைப் பீடம், பேராதெனிய பல்கலைக்கழகம் | |
| பேராசிரியர் உபாலி பன்னிலகே (*14.08.2023 வரை*)<br>*BA (Hons) (Ruhuna), PGDip. (Colombo), MPhil (Ruhuna), PhD (Ruhuna)*<br><br>திரு.ஐ.ரேணுக பிரியந்த (*w.e.f.15.08.2023* )<br>*BA (Peradeniya), PG Dip. (Bradford), MPhil (Bergen).* | பீடாதிபதி, மானிடவியல் கற்கை மற்றும் சமூக விஞ்ஞான பீடம், ருகுணு பல்கலைக்கழகம் | |
| பேராசிரியர் எம்.எம்.குணதிலக்க<br>*B.A.(Kel.), M.A.(USJ), Ph.D. (Kel. & Cambridge, UK)* | பீடாதிபதி, சமூக விஞ்ஞான பீடம், களனி பல்கலைக்கழகம். | |
| பேராசிரியர் லக்ஸ்மன் டிசாநாயக்க<br>*B. Dev.S (Colombo), PG Diploma (Colombo), MA (Vrije Universitiet Brussels, Belgium), PhD (University of Adelaide Australia), FRSA (United Kingdom)* | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் நியமிக்கப்பட்ட 4 அங்கத்தவர்கள் | |
| பேராசிரியர் டபிள்யு.எம்.பி.டி.பண்டார*BA (Peradeniya), MPhil (Peradeniya), PhD (PGIAR)* | | |
| பேராசிரியர் சமன் சந்திர ரணசிங்க (*01.06.2023 வரை*)<br>*BA (Hons); MA; PhD (USJ)*<br>வணக்கத்திற்குரிய. பேராசிரியர் பின்னவள சங்கசுமான தேரர்(*02.06.2023* முதல்)<br>*BA (Hons); MA (USJ); PhD (USJ-Uppsala)* | | |
| கலாநிதி. துஸ்யந்தி ராஜசூரியர் (*01.06.2023 வரை*)<br>*B.A (Hons)(Jaffna), M.Phil (P'deniya), PhD (Norwich, UK)*<br>குலாநிதி ரி. சநாதனன் (*21.07.2023* முதல்)<br>*BFA, MFA (Delhi, India), PhD (JNU, Delhi)* | | |

சபையின் கூட்ட நடப்பெண் முழு அங்கத்தவர் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றாகும்.

## 2.2. முகாமைத்துவச் சபையின் நியதிச்சட்ட கூட்டங்கள்

NCAS இன் நிர்வாக மற்றும் கல்வி அதிகார சபையாக இருக்கும் முகாமைத்துவச்சபை ஒவ்வொரு நாட்காட்டி வருடத்திற்கும் குறைந்தது ஆறு முறை கூடுகிறது.

**அட்டவணை 02 : முகாமைத்துவச் சபையின் உறுப்பினர் உள்ளடக்கம்**

<table>
<tr><th colspan="3">முகாமைத்துவச் சபையின் உறுப்பினர் உள்ளடக்கம்</th></tr>
<tr><td>சிரேஸ்ட பேராசிரியர் பிரேமகுமார த சில்வா ( 31.01.2023வரை)<br>BA, MA (Cmb), MSc & PhD (Edinburgh, UK)<br><br>பேராசிரியர் (திருமதி) பிரசாந்தி நாரன்கொட (01.02.2023 முதல்)<br>BA (Hons) (Kel.), MSc (PGIAR, Kel.),<br>PhD (Cali. USA)</td><td colspan="2">முகாமைத்துவ சபையின் தலைவராக பணிப்பாளர்</td></tr>
<tr><td>பேராசிரியர் என்.எஸ்.புஞ்சிஹேவாLLB (Colombo), LLM (MIPLC, Germany), PhD (University of Munich, Germany)</td><td>பீடாதிபதி, சட்ட பீடம் கொழும்பு பல்கலைக்கழகம்</td><td rowspan="6">பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உரிய நிலையியற் குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்ட மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான விடயங்களுடன் தொடர்புடைய பீடங்கள் ஆறின் பீடாதிபதிகள</td></tr>
<tr><td>கலாநிதி இ.எம்.பி.சி.எஸ்.ஏக்கநாயக்க<br>B.A. Hons. (Peradeniya), PGDE (Peradeniya), M.Ed. (Sussex, UK), M.Phil. (Colombo), and Doctor of Education (Leicester, UK).</td><td>பீடாதிபதி, கலைப் பீடம் பேராதெனிய பல்கலைக்கழகம்</td></tr>
<tr><td>சிரேஸ்ட பேராசிரியர் எல் மானவடு<br>BA (Colombo), M.Sc (A.I.T, Thailand), Ph.D (Colombo)</td><td>பீடாதிபதி, கலைப் பீடம் கொழும்புப்பல்கலைக்கழகம்</td></tr>
<tr><td>பேராசிரியர் சிரந்த ஹீன்கெட<br>BA (Hons); PGD in Statistics (USJ); MSSc (Kelaniya); MA (GRIPS-Tokyo); PhD (Nagoya)</td><td>பீடாதிபதி,மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்</td></tr>
<tr><td>பேராசிரியர் எம்.எம்.குணதிலக்க<br><br>B.A.(Kel.), M.A.(USJ), Ph.D. (Kel. & Cambridge, UK)</td><td>பீடாதிபதி, சமூக விஞ்ஞான பீடம் களனி பல்கலைக்கழகம்</td></tr>
<tr><td>பேராசிரியர்.எஸ்.குகமூர்த்தி (2023 பெப்ரவரி வரை)<br>கலாநிதி (திருமதி) டி.வி.எம்.சில்வா (2023 பெப்ரவரி முதல்)</td><td>பீடாதிபதி, கல்வியியல் பீடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்</td></tr>
<tr><td>பேராசிரியர் ஒ.ஜி.டி பண்டா B.A. Hons. (Peradeniya), MPhil (Peradeniya)</td><td colspan="2" rowspan="2">பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமித்த</td></tr>
<tr><td>பேராசிரியர்ஆர்.எம்.கே.ரத்நாயக்க</td></tr>
</table>

| | |
|---|---|
| *BA. Hons (SJP), M.Phil (SJP) M.Sc. (USJ), Ph.D. (SJP/Uppsala)* | அங்கத்தவர்கள் நான்கு பேர் |
| பேராசிரியர் எம்.ஜி.எல்.ஆனந்த<br>*BA (P'deniya), BA Hons. (Kel.), MA (JNU, India), MPhil (JNU, India), PhD (JNU, India)* | |
| பேராசிரியர் விமல் ஹேவாமானகே<br>*BA Hons. (Kelaniya), MA (Kelaniya), MPhil (Kelaniya), PhD (Wuhan University, China)* | |

சபையின் கூட்டநடப்பெண் முழு அங்கத்தவர் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றாகும்.

## 3. <u>NCAS இன் சிறந்த நிர்வாகம்</u>

NCAS 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சகல செயற்பாடுகளும் நல்லாட்சி நடைமுறைகளினை அமுல்படுத்துவதற்கும் மற்றும் உயர் தரங்களினை பிரயோகிக்கவும் அர்ப்பணிப்புடன் காணப்படுகின்றது. இதன் ஊடாக உரிய நியதிச்சட்ட ஒழுங்குகளுக்கு இணங்கிச் செல்லல், கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்தல், மற்றும் அரச நிதியம் தொடர்பாக பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புடைமை என்பன இதில் உள்ளடங்கும்.

### 3.1) அரச நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் அரச நடைமுறை விதிகளுடன் இணங்குதல்

NCAS ஆனது அரசின் முழுமையான நிதியினை பெறுகின்ற நியதிச்சட்ட சபையாக இருப்பதுடன் மேற்கொள்ளப்பட்ட நிதிக் கொடுக்கல் வாங்கல்களானது அரச நிதிப் பிரமாணங்கள், அரச திறைசேரி சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் போன்றவற்றுக்கு இணங்க அறிக்கையிடப்பட்டுள்ளது.

#### 3.1.1 **இலங்கை அரச பிரிவு கணக்கிட்டு நியமங்கள் (SLPSAS), இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) மற்றும் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்கள் (IFRSs)**

NCAS இன் நிதிக் கூற்றுக்கள் இலங்கையின் அரச பிரிவு கணக்கிட்டு நியமங்களுக்கு (SLPSAS) இணங்க தயார்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசப்பிரிவு கணக்கிட்டு நியமங்கள் (எஸ்.எல்.பி.ஏஸ்.ஏ.எஸ்) கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்கான முறையானது இலங்கையின் அரச பிரிவு கணக்கிட்டு நியமங்களுக்கு (SLPSAS) அறிமுகஞ்செய்யப்படாததால் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்காக இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் (LKAS), சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்கள் (IFRS) என்பன பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 3.2) அரச பெறுகை வழிகாட்டல்கள்

வருடத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட சகல பொருட்கள் மற்றும் சேவைகள் இலங்கை அரசின் பெறுகை வழிகாட்டல்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளது. NCAS முகாமைத்துவ சபையினால் பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பன நியமிக்கப்பட்டன. அக் குழுவில் சேவையாற்றிய அங்கத்தவர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவர்களாகும் :

**<u>திணைக்கள பெறுகைக் குழு (பெரிய)</u>**

1. சிரேஸ்ட பேராசிரியர் பிரேமகுமார த சில்வா / பதில் பணிப்பாளர் /NCAS (*31.01.2023 வரை*)
   பேராசிரியர் (திருமதி) பிரஷாந்தி நாரன்கொட / பணிப்பாளர் /NCAS (*01.02.2023* முதல்)

2. திருமதி துஷாரா மஹாநாம / தலைமைக் கணக்காளர் / கல்வி அமைச்சு

3. திருமத ரி.இளஞ்செழியபபல்லவன் / சிரேஸ்ட உதவிப் பதிவாளர் / NCAS

**<u>திணைக்கள பெறுகைக் குழு (சிறிய)</u>**

1. சிரேஸ்ட பேராசிரியர் பிரேமகுமார டி சில்வா / பதில் பணிப்பாளர் /NCAS (*31.01.2023 வரை*)

   பேராசிரியர் (திருமதி) பிரசாந்தி நாரன்கொட / பணிப்பாளர் /NCAS( *01.02.2023* முதல்)
2. திரு.எஸ்.விக்கிரமாராச்சி / சிரேஸ்ட உதவிச் செயலாளர் / பொது நிர்வாகம் /பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
3. திரு.ஜி.ஆர்.கே.எஸ் கனேகொட /சிரேஸ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் (பதில்)/NCAS

**<u>தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு</u>**

திரு.ஜி.ஆர்.கே.எஸ் கனேகொட / சிரேஸ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் (பதில்) /NCAS
கலாநிதி.சம்பத் சந்திரசேன /சிரேஸ்ட உதவி நூலகர்/NCAS *(01.08.2023* முதல்*)*
கலாநிதி.சம்பத் சந்திரசேன / தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்/NCAS *(31.07.2023* வரை*)*

பொ ருட்க ள் மற்று ம்

பேராசிரியர்.விமல் ஹேவாமானகே, பௌத்த கல்வித் திணைக்களம், கொழும்புப் பல்கலைக்கழகம்
திரு.கே.எ.பி.குணரத்தின/ வேலைப் பொறியியலாளர்/ களனி பல்கலைக்கழகம்
திரு.ஜி.டி.தமித் பெரேரா /வேலைப் பொறியியலாளர்/பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
பொறியியலாளர் ஆர்.பி.எம்.குணவர்த்தன /துணை தலைமை நிர்வாக அதிகாரி /
இலங்கை பொறியியல் நிறுவனம்

NCAS வளா கத்தி ன் புணர் நிர்மா

**3.3 பல்கலைக்கழக தாபன விதிக் கோவை மற்றும் ஆட்சேர்ப்புமுறை**

சம்பளங்கள், நியமனங்கள், பதவி உயர்வுகள், ஆணைக்குழு சம்பள அதிகரிப்பு மற்றும் விடுமுறை உள்ளடங்கலாக சகல பணியாட்குழுவின் நடவடிக்கைகளும் பல்கலைக்கழக தாபன விதிக் கோவை மற்றும் ஆட்சேர்ப்பு முறைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டு, கண்காணிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளன. நிதி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் பல்கலைக்கழக முறைமைக்கு ஏற்புடைத்தான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுற்றறிக்கையையும் பணியாட்குழுவின் சம்பளம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

## 3.4 தேர்வாளர்களை தெரிவு செய்தல் மற்றும் பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில்களை வழங்குதல் தொடர்பான NCAS வழிகாட்டல்கள்

முகாமைத்துவ சபையின் பரிந்துரைக்கு அமைவாக அவ்வப்போது புதுப்பிக்கப்படுகின்ற குறிப்பிட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க கலாநிதிப் பட்ட புலமைப்பரிசில் தொடர்பாக தேர்வாளர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். முகாமைத்துவ சபையினால் தெரிவுக்குழு நியமிக்கப்படுகின்றது. தெரிவுக் குழுவின் உள்ளடக்கம் பின்வருமாறு:

1. தெரிவுக் குழுவின் தலைவராக - பணிப்பாளர்
2. முகாமைத்துவ சபையின் உறுப்பினர் ஒருவர் (வெளிப்படைத் தன்மையை பேணும் வகையில் மானியத்திற்கான விண்ணப்பதாரிகள் அற்ற பல்கலைக்கழக உறுப்புரிமையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்)
3. மானியங்களுக்கு விண்ணப்பிக்காத அரச பல்கலைக்கழகங்களிலிருந்து அழைக்கப்பட்ட இரு சிரேஸ்ட உறுப்பினர்கள்.
4. NCAS - இன் ஆய்வாளர்

   NCAS இன் ஆய்வாளர் கற்கைக்கான விடுமுறை உரித்துடைய அரச பல்கலைக்கழகத்தின் நிரந்தர கல்விசார் உறுப்பினர்கள் NCAS இன் பட்டப்பின் படிப்பு புலமைப்பரிசில் தொடர்பாக தகைமை பெறுகின்றனர். தேர்வாளர்கள் முதுமாணி பட்டம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற பல்கலைக்கழகத்தினால் அனுமதிக்கப்பட்ட நியமனமொன்றையும் பெற்று இருத்தல் வேண்டும்.

ஆய்வாளர் ஒருவருக்கு வருடம் ஒன்றுக்கான நிதியளிப்புக்களின் அளவு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்:

- விண்ணப்பதாரிகள் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பதிவினை மேற்கொண்டிருப்பின் வருடத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையானது நிறுவனக் கட்டணம் மற்றும் ஆய்வுச்செலவுகளை அடியொட்டியதாய் அமையும்.
- விண்ணப்பதாரிகள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பதிவினை மேற்கொண்டிருப்பின் வருடத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையானது நிறுவனக் கட்டணம் மற்றும் அக்குறித்த நாட்டினுடைய வாழ்க்கைச் செலவு ஆகியவற்றில் தங்கியுள்ளது. இவ்வகையினுள் ஆண்டிற்கான அதிகபட்ச நன்கொடைத் தொகை ரூபா. 2.0 மில்லியன் ஆகும்.

- 2018 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் தனிநபருக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருமானத்திற்கு ஏற்ப ஆண்டிற்கு முன்மொழியப்பட்ட திருத்தப்பட்ட வாழ்க்கைச் செலவு பின்வருமாறு:

**அட்டவணை 03: திருத்தப்பட்ட வாழ்க்கைச் செலவு**

| வகை இல. | 2018 ஆண்டில் மொ.உ.உ வருமானம் (US $) | அதி உயர் வாழ்க்கைச் செலவு வருடம் ஒன்றிற்கு (ரூபா.) | நாடுகள் |
|---|---|---|---|
| வகை 1 | 25,000 > மேல் | 1,500,000.00 | கொரியா,அவுஸ்திரேலியா,ஐக்கிய இராச்சியம், நியூசிலாந்து,ஜப்பான்,ஜேர்மனி,அமெரிக்கா,நெதர்லாந்து, பிரான்ஸ்,கனடா,நோர்வே,சுவீடன்,சுவிட்சலாந்து,தாய்வான்,ஆஸ்திரியா,சிங்கப்பூர்,ஹொங்ஹொங், இத்தாலி |
| வகை 2 | 23,000 -24,999 | 1,450,000.00 | செக் குடியரசு, போர்த்துக்கல் |
| வகை 3 | 21,000 - 22,999 | 1,300,000.00 | கிரீஸ் |
| வகை 4 | 19,000 -20,999 | 1,200,000.00 | ஸ்லோவாக்கியா குடியரசு, ஸ்லோவேனியா |
| வகை 5 | 17,000 -18,999 | 1,200,000.00 | |
| வகை 6 | 15,000 -16,999 | 1,200,000.00 | சிலி, போலந்து, ஹங்கேரி |
| வகை 7 | 13,000 – 14,999 | 1,050,000.00 | மாலைதீவு |
| வகை 8 | 11,000 -12,999 | 1,000,000.00 | ரஷ்யா, மலேசியா, துருக்கி |
| வகை 9 | 9,000 -10,999 | 950,000.00 | பிரேசில், சீனா, மெக்சிக்கோ |
| வகை 10 | 7,000 -8,999 | 850,000.00 | |
| வகை 11 | 5,000 -6,999 | 800,000.00 | தாய்லாந்து,கொலம்பியா, தென் ஆபிரிக்கா |
| வகை 12 | 3,000 - 4,999 | 750,000.00 | ஜோர்ஜியா, இலங்கை, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், பூட்டான் |
| வகை 13 | 3,000 அல்லது குறைவு | 700,000.00 | வியட்நாம்,இந்தியா,பாகிஸ்தான்,பங்களாதேஸ், நேபாளம், கமரூன் |

மூலாதாரம்: *IMF தகவல் முறைமை ஏப்பிரல், 2018 (World Economic Outlook Database)*

## 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியின் NCAS பணியாட்குழுவினர்

**பணிப்பாளர்**

- சிரேஸ்ட பேராசிரியர் பிரேமகுமார டி சில்வா (பதில் கடமை *31.01.2023 வரை*)
  *BA, MA (Cmb), MSc & PhD (Edinburgh, UK)*

- பேராசிரியர் (திருமதி) பிரசாந்தி நாரன்கொட (*w.e.f. 01.02.2023*)
  *BA (Hons) (Kel.), MSc (PGIAR, Kel.), PhD (California, USA)*

**சிரேஸ்ட உதவி நூலகர்**

- கலாநிதி.சம்பத் சந்திரசேன
  *B.Tech. (CSE) (Kanpur, India), BIT in IT (UCSC, Col.), MA in Lib.& Info.SC (Kel.), MSc in Information Security (Col), PhD in IT (CCSU, India),*

**சிரேஸ்ட உதவிப் பதிவாளர்**

- திருமதி. ரி.இளஞ்செழியப்பல்லவன்
  சிரேஸ்ட உதவிப் பதிவாளர்

  *B.Sc. Agriculture (Hons.) (EUSL), Master of Science in Food Science and Technology (PDN)*

**சிரேஸ்ட உதவி நிதிப்பொறுப்பாளர் (பதில்)**

- திரு.ஜி.ஆர்.கே.எஸ்.கணேகொட
- *BSc in Acc.(Sp.) (USJ), MBM (IHRA, Col.) Sri Lanka Accountants Service - Class II*

**ஏனைய ஊழியர்கள்**

- திரு.எ.எல்.டி.பெரேரா - நூலக தகவல் உதவியாளர் (தரம் - II)
- திரு.கே.எம்.ஜி.ஜி.தனுஷ்க - முகாமைத்துவ உதவியாளர் (புத்தக வைப்பாளர்) (தரம் - I)
- திரு.ஆர்.கே.பி.ஐ.ரத்நாயக - முகாமைத்துவ உதவியாளர; (தரம; – III)
- செல்வி.எம்.பி.பி.கே.ஜெயரத்ன - முகாமைத்துவ உதவியாளர் (தரம் – III)
- திரு. எ.எம்.எ.எஸ்.எம்.அபேயவிக்கிரம - முகாமைத்துவ உதவியாளர் (தரம் – III)
- திரு.வினோடிதித ஹெட்டியாராச்சி - முகாமைத்துவ உதவியாளர் (தரம் – III)
- திரு.பி.பி.கே.பாலசூரிய - சிற்றூழியர் (தரம். III)
- திரு.எச்.எஸ்.பி.கருணாரத்ன - சிற்றூழியர் (தரம். III)

**அட்டவணை 04: NCAS இன் பணியாட்குழு எண்ணிக்கை**

| தொடர் இல | பதவி | சம்பள குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட பணியாட் குழுவினர் | 31.12.2023 ஆம் திகதியில் பணியாட் குழுயினர் | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| **சிரேஸ்ட மட்டம்** | | | | | |
| 01 | பணிப்பாளர் | U - AC 5(II) | 01 | 01 | - |
| 02 | சிரேஸ்ட உதவி நூலகர் | U - AC 3(II) | 01 | 01 | - |
| 03 | சிரேஸ்ட உதவிப் பதிவாளர் | U- EX 2(II) | 01 | 01 | - |
| 04 | சிரேஸ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் | U- EX 2(II) | 01 | 01 (Acting) | 01 |
| **மூன்றாம் நிலை மட்டம்** | | | | | |
| 05 | உதவி வலையமைப்பு முகாமையாளர் | U- AS 2(II) | 01 | - | 01 |
| **இரண்டாம் நிலை மட்டம்** | | | | | |
| 06 | முகாமைத்துவ உதவியாளர் | U-MN 1(III) | 04 | 02 | 02 |
| 07 | முகாமைத்துவ உதவியாளர (புத்தக வைப்பாளர்) | U-MN 1(I) | 01 | 01 | - |
| 08 | நூலகத் தகவல் உதவியாளர் | U-MN 1(II) | 01 | - | 01 |
| **முதனிலை மட்டம்** | | | | | |
| 09 | சாரதி | U-PL 3(III) | 01 | - | 01 |
| 10 | ஊழியர் | U-PL 1(III) | 02 | 02 | - |

## செயலமர்வுகள் / பாடநெறிகள் / சமர்ப்பிப்புக்கள்

NCAS இனால் 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புக்கள், பாடநெறிகள், மற்றும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்ருமாறு:

**அட்டவணை 05: 2023 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட சமர்ப்பிப்புக்கள் / குறுகியகால பாடநெறிகள் / செயலமர்வுகள்**

| இல | செயலமர்வுகள் | நடத்தப்பட்ட திகதி | இலக்குக் குழு | பங்கு பற்றல்கள் | விசேட குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01. | பண்புசார் ஆய்வுக்காக NVivo ஐ பயன்படுத்தல் தொடர்பான செயலமர்வு | 2023 ஆம் ஆண்டு மே மாதம் 20-21 | பல்கலைக்கழக கல்விசார் நிறைவேற்றுத்தர பணியாட்குழு | 15 | பூர்த்தி செய்யப்பட்டது |
| **இல** | **கௌரவ** | **நடத்தப்பட்ட** | **இலக்குக் குழு** | **பங்கு** | **விசேட குறிப்பு** |

| | விரிவுகைள் | திகதி | | பற்றல்கள் | |
|---|---|---|---|---|---|
| 02. | தெற்காசியாவின் கலை மற்றும் கலாச்சார வளர்ச்சியில் ரவீந்திரநாத் தாகூரின் தாக்கம் தொடர்பான விருந்தினர் விரிவுரை | 2023 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி | பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் | 52 | பூர்த்தி செய்யப்பட்டது |
| 03. | இலங்கை பொருளாதார நெருக்கடி பற்றிய ஒரு திறந்த அறிவுபூர்வமான கலந்துரையாடல் | 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆந் திகதி | பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் | 32 | பூர்த்தி செய்யப்பட்டது |

**பண்புசார் ஆய்வுக்கான NVivo ஐ பயன்படுத்தல் தொடர்பான செயலமர்வுகள்**

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் தொடர்பான தேசிய மத்திய நிலையம் பண்புசார் ஆய்வுக்கான NVivo ஐ பயன்படுத்தல் தொடர்பான செயலமர்வுகள் 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் ஆரம்பித்திருந்தது. ஒவ்வொரு பாடநெறி தொடர்பாகவும் 15 பேர் உள்ளீர்க்கப்பட்டனர். இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் முகாமைத்தவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மனோஜ் சமரதுங்க இக்குறித்த செயலமர்வின் வளவாளராக காணப்பட்டார். NCAS இன் தகவல் தொழில்நுட்ப ஆலோசகரான கலாநிதி சம்பத் சந்திரசேன அவர்களால் இக்கற்கைநெறிகள் ஒருங்கிணைக்கப்பட்டன.

**வருடாந்த ஆராய்ச்சி மாநாடு -2023**

NCAS ஆனது அதனுடைய 05 ஆவது வருடாந்த ஆய்வுக் கலந்துரையாடலை கொவிட் -19 தொற்றின் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னரான சூழலில் நேரடியான முறையில் நடாத்தி முடித்தது. “பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை மீட்டெடுப்பதன் ஊடான நிலைபேண்தன்மை” என்ற கருப்பொருளின் கீழ் NCAS இன் ஸ்தாபக பணிப்பாளரான மறைந்த பேராசிரியர் சேனக டயஸ் பண்டாரநாயக்கவின் படைப்புக்களை மீளவாசித்து அறிந்துக் கொள்ளலாக இடம்பெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட அதிக எண்ணிக்கையிலான விரிவாக்கப்பட்ட ஆய்வுச் சுருக்கங்களில், 52 ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டன. கலாநிதி. Lodewijk Wagenaar பிரதம பேச்சாளராக பங்கேற்றதோடு, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் மேதைகளின் பங்கேற்போடு குழுநிலை கலந்துரையாடலும் இடம்பெற்றது.

உப தலைப்புக்கள் -

1. உணரக் கூடிய மற்றும் உணர முடியாத கலாச்சாரப் பாரம்பரியம்: அடையாளத்தைக் கோருகின்ற பின்னோக்கிய பார்வை
2. சமயமும் சமூகமும்: அறிவியலுக்கு அப்பாலான தத்துவம், தொன்மம் மற்றும் யதார்த்தம்
3. சுதந்திரம், உரிமைகள் மற்றும் சமூகப் பொறுப்புக்கள் எதிர் சட்டம் மற்றும் சமூக நீதி
4. நல்லிணக்கம்,அரசியல் மற்றும் சமூகம்
5. சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் : ஆரோக்கியமான வாழ்வாதாரத்தின் இடப்பெயர்வு.
6. நிலையான அபிவிருத்தி மற்றும் SME களின் பங்களிப்பு.
7. சுற்றுலா : ஒரு தொழில் அல்லது/மற்றும் கலை
8. கற்றல் மற்றும் கற்பித்தலில் எண்ணிமக் கருவிகளின் பங்கு : மொழி கற்கைக்கான நீண்டகால கோரிக்கை
9. உண்மையான அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
10. AI (செயற்கை நுண்ணறிவு) மற்றும் டிஜிட்டல் மறுசீரமைப்பு

**<u>NCAS இன் 05 ஆவது வருடாந்த ஆய்வு மாநாட்டின் சில படங்கள் - 2023</u>**


















## NCAS இன் தகவல் தொடர்பாடல் வளங்கள்

**பல்லூடக வசதிகள்.**

பல்கலைக்கழக கல்வியலாளர்கள், நிறைவேற்று அலுவலர் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு பல கணிணி செயலிகள் அதாவது SPSS இனை பயன்படுத்தி தரவு பகுப்பாய்வு, கட்டமைப்பு சமாந்திர மாதிரிக்காக AMOS, தரவியல் ஆய்விற்காக EViews, பண்பியல் ஆய்வுத் தகவல் பாதுகாப்புக்காக NVIVO போன்றன குறித்து கற்பிக்க ஆய்வுக்கூடமானது பயன்படுத்தப்படுகின்றது. மானிய முகாமை தகவல்களின் மதிப்பீடு மற்றும் வழங்கல் தொடர்பாக மானிய முகாமைத்துவ தரவு மென்பொருள் பயன்படுத்தப்படுகின்றது.

**2023 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப பிரிவு மேற்கொண்ட செயற்பாடுகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவைாகும்:**

- நிறுவனம் தொடர்பாக தொழில்நுட்ப விபரங்கள், செயல்திட்ட முன்மொழிவுகள் மற்றும் தொழில்நுட்ப அறிக்கையினை கட்டியெழுப்புதல்.
- Windows Server மற்றும் LINUX servers லினக்ஸ் சேவை வழங்குனர் மற்றும் றவுட்டர் போன்ற தொடர்புடைய உபகரணங்களினை பொருத்துதல் செயல்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு.
- Servers and Workstations தொடர்பாக மென்பொருள்களில் நிறுவுதலும் மென்பொருட்களை ஒருங்கிணைத்தலும்.
- சேவையக முகாமைத்துவம் - அச்சு மற்றும் கோப்புப் பரிமாறி, அச்சு சேவையகம், அடிப்படை செயற்பாட்டு முறைமை நியமங்கள், இயக்கு முறைமை, தரமுயர்த்தல் மற்றும் பராமரிப்பு, காப்பு நகல் / மீள்நிலைப்படுத்தல் சேவையகம், வன்பொருள் உருவமைப்பு போன்ற சேவையக வடிவமைப்பும் செயற்படுத்தலும்.
- கண்காணித்தல் - கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்வுக் கருவிகள் தொடர்பான விதப்புரைகளைத் தயாரித்தல். கருவிகளைத் தயாரித்தலும் செயற்படுத்தலும் காப்பு நகல் வலையமைப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தலும் செயற்படுத்தலும்.
- தகவல் பாதுகாப்புத் தேவைப்பாடுகளை செயற்படுத்துதல், அனுசரனையும் பராமரிப்பும், பாதுகாப்புச் சீர்படுத்தல்கள், இயக்க முறைத் தரமுயரத்தல் உட்பட செயலாற்றல் முறைமைகள் உள்ளடங்கலாக முறைமை பராமரிப்பு செயலாற்றுகை, அமுல்படுத்தல், ஒத்துழைப்பு மற்றும் தகவல் பாதுகாப்புத் தேவைப்பாடுகளை பராமரித்தல்.
- வைரசிற்கு எதிரான மைய முகாமைப் பிரயோக பராமரிப்பு, Kasperskey வைரஸ் - எதிர்ப்பு மென்பொருள்.
- தரமுயர்த்தல், சீர்படுத்தல்களை இடுதல், புதிய பிரயோகங்கள் மற்றும் கருவிகளை விதப்புரை செய்தல்
- விண்டொஸ் மற்றும் லினக்ஸ் அடிப்படையிலான உட்கட்டடைமப்புத் தீர்வுகளை வடிவமைப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் என வியாபார தேவைப்பாடுகளை இணங்காணுதல். எதிர்கால முறைமையைத் தரமுயரத்தலும் மதிப்பீடு செய்தலும்.
- நிறுவனத்திற்கென எப்பொழுதும் இணையத்தளத்தைப் புதுப்பித்தல் (www.ncas.ac.lk),இணையம், நூலகம் மற்றும் தரவுத்தளம் போன்றவற்றை விருத்தி செய்தல்
- (www.ncas.ac.lk) என்ற டொமைன் (Domain) மற்றும் மின்னஞ்சல் முறைமையினை Google cloud services இணைத்துப் பராமரிப்புச் செய்தல்.
- சகல கல்விசார், எண்ணிக்கை சார் மற்றும் பண்பு சார் தகவல் பகுப்பாய்வு கற்கைநெறிகள் மற்றும் செயலமர்வுகான எஸ்.பி.எஸ்.எஸ், எ.எம்.ஓ.எஸ், என்.வி.ஐ.வி.ஒ, இ வீவ்ஸ் (SPSS,AMOS, NVIVO ,EVIEWS) போன்றன.

## NCAS புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம்

